# குணமாக்கும்

# வேத மாத்திரை

# (வசனங்கள்) 2.0

வியாதிகளை விரட்டும் விசுவாச அறிக்கைகள்




ஏசுதாஸ் சாலொமோன்

# குணமாக்கும்

# வேத மாத்திரை

# (வசனங்கள்) 2.0

வியாதிகளை விரட்டும் விசுவாச அறிக்கைகள்

ஏசுதாஸ் சாலொமோன்

*WOG BOOKS 192 First Edition 2026*

**ஆசிரியர் / *Author*:**

ஏசுதாஸ் சாலொமோன் / *Yesudas Solomon*

**பதிப்பு / *Published By*:**

*Bible Minutes, www.WordOfGod.in*

**காப்புரிமை / *Copyright*:**

*Public Domain* / இலவசம் / பொதுதளம்

*This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us.* இந்தப் புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்தப் புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்புச் செய்துக்கொள்ளலாம்.

**பதிவிறக்கம் / *Download*:**

www.WordOfGod.in and www.Archive.org

**தொடர்புக்கு / *Contact Us*:**

*WhatsApp:* +91 7676505599
*Email:* *wordofgod@wordofgod.in*

இந்தப் புத்தகமானது, 15 வருடங்களுக்கு முன் வெளிவந்த ஒலிநாடாவின் புத்தகப் பதிப்பல்ல; மாறாக, அநேகப் புதிய குறிப்புகளுடன் முற்றிலுமாக மாற்றப்பட்ட, தனிப்பட்ட வகையில் இலகுவாகப் பயன்படுத்தும்படி எழுதப்பட்ட புதிய படைப்பு.

# பொருளடக்கம்

ஆசிரியர் உரை ............................................................i

தேவனுடைய மருந்தை உட்கொள்ளும் முறை............ 1

பரிபூரண சுகத்திற்கான விசுவாச அறிக்கைகள்............ 11

1. அஸ்திபாரம் - தேவனுடைய சித்தமும் சிலுவையின் மீட்பும்................................................................... 13

2. மருந்து - வார்த்தையின் வல்லமையும் விசுவாசமும் ........................................................................ 31

3. நமது அடையாளம் - கிறிஸ்துவோடு இணைந்திருத்தல்........................................................ 45

4. ஆவிக்குரிய யுத்தமும் அதிகாரமும்......................... 55

5. நிறைவுப் பிரகடனம் - இயேசுவின் நாமத்தின் வல்லமை ...................................................................... 73

கிறிஸ்துவின் வல்லமையும் மாறாத தன்மையும்......... 79

சுகமளிக்கும் தேவ வாக்குத்தத்தங்கள்......................... 81

பெலன் மற்றும் நம்பிக்கையின் வாக்குத்தத்தங்கள்..... 85

விசுவாசம் மற்றும் ஜெபத்திற்கான ஆலோசனைகள்... 89

எங்களின் வெளியீடுகள் ............................................... 93

# ஆசிரியர் உரை

தேவனுடைய உன்னதமான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துகள்.

யாத்திராகமம் 15:26-ம் வசனத்தில் தேவன், "நானே உன் பரிகாரி" என்று சொல்கிறார். சங்கீதம் 107:20-ம் வசனத்தில் தேவன், தமது வசனத்தை அனுப்பி நம்மைக் குணமாக்கி, நம்மை அழிவுக்குத் தப்புவிக்கிறார் என்று காண்கிறோம். ஏசாயா 55:11-ம் வசனத்தில் தேவனுடைய வசனமாகிய அவருடைய வார்த்தைகள், அவர் விரும்புகிறதைச் செய்யும், அவர் எந்தக் காரியத்திற்காக அனுப்புகிறாரோ, அதைச் செய்து முடித்துவிட்டுத் தான் திரும்பும் என்று காண்கிறோம். எபிரெயர் 4:12-ம் வசனத்தில், தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளது என்று வாசிக்கிறோம். ஏசாயா 53:4-5; மத்தேயு 8:17 வசனங்களில், மெய்யான தெய்வமாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டார், நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமாகிறோ ம் என்றும் காண்கிறோம்.

இந்த வசனங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? தேவனுடைய வார்த்தைகள் அல்லது வசனங்கள், நம்முடைய மனதை மட்டுமல்ல, நம்முடைய சரீர சுகவீனங்களையும், நோய்களையும் (வியாதிகளையும்), பெலவீனங்களை யும் கூடக் குணமாக்க வல்லது என்பதுதான்.

ஆம், தேவனுடைய வார்த்தைகளுக்கு ஜீவன் இருக்கிறது, வல்லமை (*Power*) இருக்கிறது. ஆறுதலாகவும், தேறுதலாகவும், கண்டிப்பதாகவும், கட்டளையாகவும் வேலை செய்யும் தேவனுடைய வார்த்தைகள், "மருந்தாகவும்" (அதாவது மாத்திரை யாகவும், ஔஷதமாகவும்) வேலை செய்கிறது என்பது நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மை. இயேசு கிறிஸ்துவினால் குணமாக்க முடியாத வியாதி என்று ஒன்று இல்லவே இல்லை.

*அவருடைய வார்த்தை ஒன்றே போதும்!*
*அத்தனை வியாதிகளும் பறந்தே போகும்!!*

**15** வருடங்களுக்கு முன்பு பழைய பதிப்பை நாங்கள் ஒலிநாடாவாக வெளியிட இருக்கும் பொழுது, இதற்கு என்ன பெயர் சூட்டலாம் என்று நினைத்தபொழுது சற்றும் தாமதமின்றி வந்த பெயர்தான் "குணமாக்கும் வேத மாத்திரை / *Healing Bible Tablet*".

எங்களுடைய "தேவனுடைய வார்த்தை குழு / *Word of God Team*"-ல் உள்ள உறுப்பினர்களும் இந்தத் தலைப்பை மனதார ஏற்றுக்கொண்டார்கள். இந்தத் தலைப்பின்படியே இந்த வசனங்கள் மாத்திரையாக, மருந்தாக வேலை செய்தன. அந்த முதல் ஒலிநாடா வெளிவர அநேக உறுப்பினர்கள் பிரயாசப்பட்டார் கள், வெளிவந்த பின்பு மற்ற உறுப்பினர்கள் அதை உலகெங்கும் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

அந்த ஒலிநாடாவை வெளியிட்ட ஒரு சில வாரங்களில் "பால்ராஜ் ஜோசப்" என்னும் சகோதரர் ஹைதராபாத்திலிருந்து என்னைத் தொடர்புகொண்டு முதல் சாட்சியைப் பகிர்ந்தார். இந்த ஒலிநாடாவை (MP3), மூளைப் புற்றுநோயினால் (Brain Cancer) பாதிக்கப்பட்ட தன்னுடைய உறவினருக்குக் கொடுத்திருக்கிறார். மருத்துவர்களால் கைவிடப் பட்ட நிலையில், இந்த வசனங்களைக் கேட்டு, அறிக்கையிட்டு, அந்தச் சகோதரி முழுமையாகக் குணமானார்கள். மருத்துவர்களாலும் இதை நம்ப முடியவில்லை. மீண்டும் பரிசோதனை செய்தபோது நோய் இருந்ததற்கான அறிகுறியே இல்லை.

இதைப் போலவே சில மாதங்களில், கர்நாடகா மாநிலத்திலிருந்து பாஸ்டர் சாம் என்பவர் என்னிடம் இன்னொரு சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். அவருடைய சபையில் *HIV*-யினால் பாதிக்கப்பட்ட ஒருவர் வெளியே சொல்ல முடியாமலும் என்ன செய்வதென்று அறியாமலும் இருந்த பொழுது, இந்த ஒலிநாடாவை ஜெபத்துடன் கொடுத்திருக்கிறார். சில மாதங்கள் கழித்துப் பரிசோதனை செய்தபோது நோய் இருந்த அறிகுறியே இல்லாமல் போனதைக் கண்டறிந்தனர். இப்படி அநேக சாட்சிகளை ச் சொல்லிக்கொண்டே போகமுடியும்.

*தேவனால் முடியாதது ஒன்றும் இல்லை!*

*அவருடைய வார்த்தைகளால் செய்ய முடியாதது என்று ஒன்றுமே இல்லை!!*

இந்தப் புத்தகமானது, **15** வருடங்களுக்கு முன் வெளிவந்த ஒலிநாடாவின் புத்தகப் பதிப்பல்ல; மாறாக, அநேகப் புதிய குறிப்புகளுடன் முற்றிலு மாக மாற்றப்பட்ட, தனிப்பட்ட வகையில் இலகு வாகப் பயன்படுத்தும்படி எழுதப்பட்ட புதிய படைப்பு.

நீங்கள் இதைப் பயன்படுத்தும் வகையாவது, இயேசு கிறிஸ்துவின் மீதும்,

தேவனுடைய வார்த்தையாகிய அவருடைய வசனத்தின் மீதும் உறுதியான நம்பிக்கை வைத்து, இவைகளை:

1. வாசித்து அல்லது கேட்டு,
2. வாயினாலோ அல்லது மனதிற்குள்ளேயோ அறிக்கை செய்து வந்தால் போதும்.

மற்றதை இயேசு கிறிஸ்து பார்த்துக்கொள்வார். இவர்களுக்கு அற்புதம் செய்த அதே இயேசு கிறிஸ்து உங்களுக்கும் செய்வார்.

ஆமென், தேவன் தாமே உங்களுக்கு அற்புத சுகம் கொடுப்பாராக!

இயேசுவின் அடிமை,

*ஏசுதாஸ் சாலொமோன்*

*12 மார்ச் 2026*

# தேவனுடைய மருந்தை உட்கொள்ளும் முறை

*நீதிமொழிகள்* ***4:20-22:*** *"என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக் குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக் கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல் லாம் ஆரோக்கியமுமாம்."*

*இந்த* ***22-****வது வசனத்தில் இடம்பெற்றுள்ள "ஆரோக்கியம்" என்ற வார்த்தையின் மூல எபிரேயப் பதம் "மருந்து" என்பதாகும். ஆம், தேவனுடைய வார்த்தையானது வெறும் எழுத்துக்கள் அல்ல; அது நம்முடைய முழு சரீரத்திற்கும் ஏற்ற சிறந்த மருந்தாக, பிணிகளை நீக்கும் அற்புத மாத்திரையாகச் செயல்படுகிறது.*

*யாத்திராகமம்* ***15:26-****ல் கர்த்தர், "நானே உன் பரிகாரி (வைத்தியர்)" என்று கூறுகிறார். அந்த மாபெரும் வைத்தியர்*

நமக்கு அளிக்கும் மருந்துதான் அவருடைய வார்த்தைகள்.

இன்று பலர், தேவ வசனமாகிய அந்த மருந்தை உட்கொள்ளாமல், வெறுமனே 'குணமடைவதில்' மட்டும் நம்பிக்கை வைக்கும் தவறைச் செய்கிறார்கள். மருந்தைச் சாப்பிடாமலேயே, "நான் சுகமாவேன் என்று விசுவாசிக்கிறேன்" என்று சொல்வது எப்படிச் சரியாகும்?

உணவின் மீது நம்பிக்கை வைத்துவிட்டு, அதைச் சாப்பிடாமல் இருந்தால் என்ன பிரயோஜனம்? நாம் பட்டினியாகத்தான் இருப்போம். அதேபோல, தண்ணீரை விசுவாசித்துவிட்டு, அதைக் குடிக்காமல் இருந்தால் நம் தாகம் தீருமா?

தேவனுடைய வார்த்தையே அவர் நமக்குக் கொடுத்திருக்கும் அருமருந்து. நாம் சாப்பிடும் சாதாரண மருந்துகளுக்கும், தேவனுடைய இந்த ஆவிக்குரிய மருந்துக்கும் இடையே சில அற்புதமான ஒற்றுமைகள் உள்ளன.

**முதலாவதாக,** ஒரு மருந்துக்கு எப்படி இயல்பாகவே நோயைக் குணமாக்கும் தன்மை இருக்கிறதோ, அதேபோலவே தேவனுடைய வார்த்தைக்கும் உங்களைக் குணமாக்கும் ஜீவன் இருக்கிறது என்பதை

நாம் அறிந்துகொள்ள வேண்டும். வேறுவிதமாகச் சொல்வதென்றால், ஒரு மருந்தின் வீரியமே (*potency*) வியாதியை வேரறுக்கிறது. அதேபோல, தேவனுடைய வார்த்தையோடு நாம் ஒன்றியிருக்கும்போது, அது நம்முடைய சரீரத்தில் பரிபூரண சுகத்தைக் கொண்டுவரும் ஆற்றலையும், திறனையும், வல்லமையையும் தன்னுள் கொண்டிருக்கிறது.

இந்த உண்மையை வேத வசனங்கள் மிகத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன:

- *சங்கீதம் 107:20 கூறுகிறது: "அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்."*
- *நீதிமொழிகள் 4:22 கூறுகிறது: "அவைகளைக் (தேவனுடைய வசனங்களை) கண்டுபிடிக்கிறவர்களுக்கு, அவைகள் ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்."*
- *ஏசாயா 55:11 கூறுகிறது: "என் வசனமும் இருக்கும்; அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."*

# குணமாக்கும் வேத மாத்திரை

தேவனுடைய வார்த்தைக்கு, அது எதைச் சொல்கிறதோ அதை அப்படியே உருவாக்கும் படைப்பின் வல்லமை உண்டு. ஆதியிலே தேவன், "வெளிச்சம் உண்டாகக் கடவது" என்று சொன்ன மாத்திரத்தில் எப்படி இருள் நீங்கி வெளிச்சம் உருவானதோ, அதேபோலவே வேதத்தில் உள்ள சுகமளிக்கும் வசனங்களுக்கும் உங்கள் உடலிலே சுகத்தை உருவாக்கும் தெய்வீகத் தன்மை உண்டு. அவர் தமது வார்த்தையை அனுப்புகிறார்; அது உங்களைக் குணமாக்கி, உங்களை எல்லாவிதமான அழிவுகளிலிருந்தும் விடுவிக்கிறது.

தேவனுடைய வார்த்தை உயிரற்ற எழுத்துக்கள் அல்ல என்பதை எபிரேயர் 4:12 ஆணித்தரமாகப் பறைசாற்றுகிறது: "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது."

ஆகவே, தேவனுடைய வசனம் உங்கள் மனதில் ஆழமாகப் பதியும் வரை அதைத்

தொடர்ந்து தியானியுங்கள். அப்படித் தியானிக்கும்போது, அந்த வசனத்தின் ஜீவனும் பெலனும் உங்கள் ஆவிக்குள் தங்கும். இப்படி தேவனுடைய வார்த்தை யைத் தியானித்து உட்கொள்வதே, அவருடைய ஜீவனையும் குணமாக்கும் வல்லமையையும் நீங்கள் முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கான திறவு கோலாகும்.

**இரண்டாவதாக,** ஒரு மருந்து யாருக்கு வேலை செய்யும், யாருக்கு வேலை செய்யாது என்று நபர்களைப் பார்த்துச் செயல்படுவதில்லை. மாறாக, அந்த மருந்தை ஒரு நபர் எவ்வளவு சரியாகவும், முறையாகவும் உட்கொள்கிறார் என்பதைப் பொறுத்தே அது பலனளித்து சுகத்தைக் கொண்டுவருகிறது. தேவனுடைய வார்த்தையும் அப்படித்தான்.

ஆகவே, இந்த வேத வசனங்களை ஆவிக்குரிய மாத்திரைகளாக நீங்கள் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். உங்கள் உடலில் பூரண சுகம் உண்டாகும் வரை, சற்றும் மனம் தளராமல் இந்த வசனங்களை உங்கள் கண்களால் பார்த்து வாசியுங்கள்; உங்கள் காதுகளால் கேட்டு உணருங்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக, இவற்றை ஒரு

*மருந்தைப் போல உங்கள் இருதயத்திற்குள் ஆழமாகப் பதிய வையுங்கள்.*

***மூன்றாவதும், மிக முக்கியமானதுமான காரியம் என்னவென்றால்:*** *மருத்துவர் அளித்த குறிப்புகளின் படியே (Prescription) மருந்தை நாம் உட்கொள்ள வேண்டும்.*

*சில மருந்துகளில் "உட்புறமாக உட்கொள்ளவும்" என்றும், சிலவற்றில் "வெளிப்புறமாகப் பூசவும்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும். உட்கொள்ள வேண்டிய மாத்திரையை உடலின் மேல் பூசுவதாலோ, அல்லது 'சாப்பிடுவதற்கு முன்' போட வேண்டிய மருந்தை 'சாப்பிட்ட பின்' உட்கொள்வதாலோ எந்தப் பலனும் கிடைக்காது; அதன் குணமாக்கும் வீரியமும் குறைந்துவிடும். அதேபோல, ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட வேண்டிய மருந்தை, எப்போதாவது ஒருமுறை மட்டும் சாப்பிட்டால் நாம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா? கிடைக்காது. உலகின் மிகச் சிறந்த மருந்தாக இருந்தாலும், அதற்கென கொடுக்கப்பட்ட அறிவுரைகளின்படி பயன்படுத்தாவிட்டால் அது வேலை செய்யாது. தேவனுடைய வார்த்தையாகிய மருந்துக்கும் இது நூற்றுக்கு நூறு பொருந்தும். அது பலன்தர வேண்டுமானால்,*

வேதத்தின் குறிப்புகளின்படியே நாம் அதை உட்கொள்ள வேண்டும்.

இதைத்தான் நீதிமொழிகள் 4:20-21 நமக்குத் தெளிவாகக் கற்றுக்கொடுக்கிறது:

"என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக் கொள்."

தேவனுடைய வார்த்தை வெறும் மூளைக் குரிய அறிவால் (Intellectual knowledge) நமக்குள் கிரியை செய்வதில்லை. மாறாக, அந்த வார்த்தை களைக் கூர்ந்து கவனித்து, காதுகளால் கேட்டு, கண்களால் வாசித்து, வாயினால் உச்சரித்து, மனதிற்குள் அசைபோட்டு, ஆழமாகத் தியானிக்கும் போது மட்டுமே அது நம் இருதயத்திற்குள் சென்று தங்கும். அப்படி இருதயத்திற்குள் ஆழமாக வேரூன்றும் வசனங்கள் மட்டுமே உங்கள் சரீரத்தில் மெய்யான சுகத்தைக் கொண்டுவர முடியும் என்பதை நீங்கள் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆம், ஒருமுறை தேவனுடைய வார்த்தை உங்கள் இருதயத்திற்குள் முழுமையாக உட்புகுந்து விட்டால், அது நிச்சயமாகவே சுகத்தைக் கொண்டுவரும்!

தேவனுடைய குணமாக்கும் வல்லமையானது முதலாவது உங்கள் ஆவிக்குள் ஊடுருவி, அதன் பிறகே உங்கள் சரீரத்திற்குள் பாய்ந்து சுகமளிக்கிறது. எனவே, தேவனுடைய மருந்தை நீங்கள் 'உட்புறமாக' ஆழமாக உட்கொள்ள வேண்டும்.

இங்கே ஒரு முக்கியமான காரியத்தைக் கவனியுங்கள்: "குணமாவதற்கு என்னிடம் போது மான விசுவாசம் இருக்கிறதா, இல்லையா?" என்று உங்களை நீங்களே குழப்பிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, நம்பிக்கையோடு இந்த வேத மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொள்ளத் தொடங்குங்கள். அதுவே போதுமானது.

நீங்கள் கையில் வைத்திருக்கும் இந்தச் சிறிய புத்தகம், அப்படிப்பட்ட ஜீவனுள்ள, குணமாக்கும் வசனங்களை உள்ளடக்கிய ஒரு பொக்கிஷமாகும். இந்த வசனங்களைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள்; சத்தமாக உங்களுக்கு நீங்களே அறிக்கையிடுங்கள். இந்த வார்த்தையாகிய மருந்து உங்களுக்குள் செல்லச் செல்ல, அதுவே தன் வேலையைத் தொடங்கி உங்களில் பரிபூரண சுகத்தை நடப்பிக்கும்!

**நான்காவதாக,** எந்தவொரு மருந்தும் உடலில் வேலை செய்வதற்குச் சிறிது கால

அவகாசம் தேவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

உலகப்பிரகாரமான ஒரு வியாதி வரும்போது, மக்கள் பணத்தைச் செலவழித்து மருந்து வாங்குகிறார்கள்; அந்த மருந்து தன் வேலையைச் செய்து அவர்களைக் குணமாக்கும் வரை மிகவும் பொறுமையோடு காத்திருக்கிறார்கள். மருந்து தீர்ந்துவிட்டால், மீண்டும் கடையில் சென்று வாங்கித் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள். இதிலெல்லாம் அவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள்! ஒரேயொரு முறை மாத்திரையைச் சாப்பிட்ட உடனேயே அற்புதம் நடந்துவிட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதில்லையே?

அதேபோலத்தான், தேவனுடைய வார்த்தையாகிய மருந்தையும் நீங்கள் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். அது உங்கள் சரீரத்திற்குள் ஆழமாகச் சென்று வேலை செய்வதற்கான கால அவகாசத்தை நீங்கள் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளை உங்கள் வாயினால் சத்தமாக அறிக்கையிடும்போது, நீங்கள் உண்மையில் அந்த வேத மாத்திரையை உட்கொள்கிறீர்கள். நீங்கள் சொல்லும் அந்த வசனங்களை இருதயத்தில்

## குணமாக்கும் வேத மாத்திரை

*ஆழமாக நினைத்துத் தியானிக்கும் போதும், தேவனைத் துதிப்பதற்காக அவற்றைப் பயன்படுத்தும் போதும், அவருடைய வார்த்தையானது உங்கள் முழுச் சரீரத்திற்கும் ஜீவன் தரும் அருமருந்தாக மாறுகிறது!*

# பரிபூரண சுகத்திற்கான விசுவாச அறிக்கைகள்

*இந்த வார்த்தைகளை உங்கள் வாயினால் சத்தமாக, முடியாவிட்டால் மனத்திற்குள்ளாவது, முழு விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள்.*

# 1. அஸ்திபாரம் – தேவனுடைய சித்தமும் சிலுவையின் மீட்பும்

*3 யோவான் 1:2*
*"பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்."*

***விசுவாச அறிக்கையிடல்:*** *(இந்த வார்த்தைகளை உங்கள் வாயினால் சத்தமாக, முடியாவிட்டால் மனத்திற்குள்ளாவது, முழு விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள்)*

- *என் ஆத்துமா கர்த்தருக்குள் எப்படிச் செழிக்கிறதோ, அதேபோல என் சரீரமும் எல்லாவற்றிலும் செழித்தோங்குகிறது!*
- *நான் எப்பொழுதும் பரிபூரண சுகமுடன் வாழ்கிறேன்; ஏனென்றால், நான் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதே என் தேவன் என்மேல் வைத்திருக்கிற மாறாத சித்தமாயிருக்கிறது.*

- *என் வியாதியைக் காட்டிலும் என் சுகத்தின் மேலேயே அவர் அதிக விருப்பமாய் இருக்கிறார்.*
- *பிலிப்பியர் **2:13**-ன்படி, தம்முடைய அந்தத் தயவுள்ள விருப்பத்தையும் சித்தத்தையும் என் சரீரத்தில் நிறைவேற்றுவதற்கு, தேவன் தாமே இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்துகொண்டிருக்கிறார்.*
- *என் தேவனுடைய சித்தத்தின்படியே நான் எல்லாவிதமான ஆசீர்வாதங்களோடும், முழுமையான ஆரோக்கியத்தோடும் வாழ்கிறேன்! ஆமென்.*

---

*யாத்திராகமம் **15:25-26***

*"மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று... அவர்: எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *இன்று தேவன் என்னைப் பார்த்து, "நானே உன்னைக் குணமாக்கிக்*

கொண்டிருக்கிற கர்த்தர்" என்று பேசிக்கொண்டிருக்கிறார்.

- அவருடைய வார்த்தை எனக்குள் அற்புதமாக வேலை செய்வதை அவர் கவனித்துக்கொண்டிருக்கிறார்.
- என்னைக் குணமாக்கும் பரிகாரி அவரே; இந்த வினாடியிலும் அவர் என்னைச் சுகமாக்கிக் கொண்டிருக்கிறார்.
- தேவனுடைய வார்த்தை எதைச் சொல்லுகிறதோ, அதை அப்படியே நிறைவேற்றும் வல்லமை கொண்டது. அந்த வார்த்தையை நான் இப்போது முழுமையாகப் பெற்றுக்கொள்கிறேன்.
- அவருடைய வார்த்தையில் உள்ள தெய்வீகச் சுகத்தை என் சரீரத்திற்குள் ஈர்த்துக்கொள்கிறேன்.
- சுகமளிப்பது என் தேவனுடைய சுபாவம். அந்த தேவன் இப்போது எனக்குள் வாழ்கிறார்!
- என் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கிறது; பிணிகளை நீக்கும் என் தேவன் வாசம் செய்யும் மாளிகையாக இருக்கிறது.

- *என் தேவன் சாத்தானை விடவும், எந்தவொரு வியாதியை விடவும் மகா வல்லவர்!*
- *என்னைக் குணமாக்கும் கர்த்தரே என் மேய்ப்பராக இருக்கிறார்; ஆகையால் என் பரிபூரண சுகத்திற்கு நான் ஒருபோதும் குறைவுபடேன்.*
- *என் சரீரமானது எனக்குள் வாசம் செய்யும் தேவனுடைய சுகமளிக்கும் வல்லமைக்கும், அவருடைய தெய்வீகச் சுபாவத்திற்கும் முழுமையாகக் கீழ்ப்பட்டி ருக்கிறது. சுகத்தையுடைய தேவன் என்னிலிருக்கிறார்!*
- *அன்பின் பிதாவே, நீர் என் பரிகாரியாக இருப்பதற்காகவும், இப்பொழுதே என் னைக் குணமாக்கிக் கொண்டிருப்பதற்காக வும் உமக்குக் கோடானுகோடி ஸ்தோத்தி ரங்களை ஏறெடுக்கிறேன். ஆமென்.*

---

*யாத்திராகமம் **23:25***

*"உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக் கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னைவிட்டு விலக்குவேன்."*

---

***விளக்கம்:*** *ஆங்கில வேதாகமத்தில் கர்த்தர் இந்த வசனத்தில் "நானே" (I will) என்று*

ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுவதைப் பார்க்கிறோம். ஆம், அவரே நேரடியாக நம் வாழ்வில் செயல்படுகிறார்!

***விசுவாச அறிக்கையிடல்:***

- *தேவன் இப்போது என்னைப் பார்த்து, "நானே வியாதியை உன்னைவிட்டு விலக்குவேன்" என்று தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருக்கிறார்.*
- *அவருடைய வார்த்தை இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்வதை அவர் நோக்கிக்கொண்டிருக் கிறார்.*
- *ஆம், என் தேவன் இப்போதே என்னிலிருந்து எல்லா வியாதிகளையும் முற்றிலும் விலக்கிக்கொண்டிருக்கிறார்.*
- *வியாதியே, என் சரீரத்தை விட்டு உடனே அகன்று போ! வல்லமையுள்ள கர்த்தர் தாமே உன்னை என்னைவிட்டு அகற்றிக்கொண்டிருக்கிறார்.*
- *என் சரீரத்திலிருந்து வியாதியை வேரோடு எடுத்துப் போட்டதற்காக அன்பின் பிதாவே உமக்கு நன்றி!*

- *நீர் சொன்ன வார்த்தையை என் வாழ்வில் நிறைவேற்றி வருவதற்காக உமக்குக் கோடானுகோடி ஸ்தோத்திரம்!*

---

*உபாகமம் 7:15*

*"கர்த்தர் சகல நோய்களையும் உன்னைவிட்டு விலக்குவார்; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவைகளை வரப்பண்ணுவார்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *கர்த்தர் தாமே சகல நோய்களையும், வியாதிகளையும் என்னைவிட்டு முற்றிலும் விலக்கிக்கொண்டிருக்கிறார்.*
- *என் தேவனுடைய வார்த்தைக்கு, அது எதைச் சொல்லுகிறதோ அதை அப்படியே உருவாக்கும் படைப்பின் வல்லமை உண்டு!*
- *சுகமளிப்பதற்காக அனுப்பப்பட்ட அவருடைய வார்த்தை, தன் வேலையைச் செய்து முடிக்காமல் ஒருபோதும் வெறுமையாய் அவரிடத்திற்குத் திரும்பாது.*
- *தேவனாகிய கர்த்தர் வியாதியை மட்டுமன்றி, என் சரீரத்தில் உள்ள*

*ஒவ்வொரு பலவீனத்தின் மற்றும் குறைபாட்டின் சுவடுகளையும் கூட என்னைவிட்டு முற்றிலுமாக அகற்றிப்போடுகிறார்.*

- *வியாதியின் ஆதிக்கமே, நீ என்னைவிட்டு இப்போதே முழுமையாக விலகிப்போ!*
- *அன்பின் பிதாவே, நீர் அளித்த வாக்குத்தத்தத்தின்படியே சகல நோய்களையும் என்னைவிட்டு நீக்கிப்போட்டதற்காய் உமக்குக் கோடானுகோடி ஸ்தோத்திரம்!*

---

*சங்கீதம் 103:2-3*

*"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களை எல்லாம் குணமாக்குகிறார்."*

---

**ஒரு முக்கிய குறிப்பு:** இங்கே 'உபகாரங்கள்' *(Benefits)* என்று சொல்லப்பட்டிருப்பது, ஒரு எஜமான் தன்னிடம் மீதமிருப்பதிலிருந்து மனமிரங்கிக் கொடுக்கும் சலுகைகளோ அல்லது வெகுமதியோ அல்ல; மாறாக, அவை புதிய உடன்படிக்கையின் இரத்தத்தினால் நாம் உரிமையோடு பெற்றுக் கொள்ளும்

*ஆசீர்வாதங்களாகும். எனவே, பரிபூரண சுகம் என்பது வெறுமனே ஒரு வாக்குத்தத்தம் மட்டுமல்ல, அது மீட்பின் மூலம் நாம் பெற்ற மாபெரும் சுதந்திரம்!*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *என் ஆத்துமாவே, என்னைக் குணமாக்கும் **'யெகோவா ரஃப்பா'**வாகிய கர்த்தரை முழு உள்ளத்தோடு ஸ்தோத்தரி!*
- *பிதாவாகிய தேவன் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்படுவாராக. கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்.*
- *நீர் என் வாழ்வில் செய்த, செய்து கொண்டிருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும், உடன்படிக்கையின் உபகாரங்களுக்காகவும் உம்மைத் துதித்து ஸ்தோத்தரிக்கிறேன்.*
- *என் எல்லாப் பாவங்களையும், குற்றங்களையும், என் பின்மாற்றங்கள் மற்றும் கீழ்ப்படியாமைகள் அனைத்தையும் நீர் கல்வாரிச் சிலுவையில் முற்றிலுமாக மன்னித்தபடியால் உமக்கு நன்றி.*
- *என் ஆத்துமாவின் பாவங்களை மன்னித்தது போலவே, என் சரீரத்தின் சகல நோய்களையும் நீர் குணமாக்குகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.*

- *புதிய உடன்படிக்கையின்படி, எனக்கான பரிபூரண சுகத்தை நான் இப்போது உரிமையோடு பெற்றுக்கொள்கிறேன். ஆம், சுகம் என்பது மீட்பில் நான் பெற்ற சுதந்திரம்!*
- *அன்பின் பிதாவே, என்னுடைய எல்லா வியாதிகளையும் நீர் வேரோடு நீக்கி என்னைச் சொஸ்தமாக்கினபடியால் உமக்குக் கோடானுகோடி ஸ்தோத்திரம்! ஆமென்.*

---

*மத்தேயு 8:2-3*

"*அப்பொழுது, குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.*"

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *நான் பரிபூரண ஆரோக்கியத்தோடு வாழ வேண்டும் என்பதே என் தேவனுடைய ஆழமான விருப்பமாக இருக்கிறது!*
- *என்னைக் குணமாக்குவது நூற்றுக்கு நூறு தேவனுடைய பரிபூரண சித்தமே ஆகும்.*

"உமக்குச் சித்தமானால்..." என்ற சந்தேகம் இனி என் மனதில் இல்லை!

- இயேசு அந்த மனிதனைத் தொட்டது போலவே, இப்போது என்னையும் தொட்டு "எனக்குச் சித்தமுண்டு, நீ சுத்தமாகு" என்று அன்போடு சொல்லியிருக்கிறார்.
- பிலிப்பியர் 2:13-ன்படி, தம்முடைய தயவுள்ள சித்தத்தை என் சரீரத்தில் நிறைவேற்றும்படி, தேவன் தாமே இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்துகொண்டிருக்கிறார்.
- என் தேவனுடைய அந்தத் தெய்வீக சுகமாக்குதல், இந்த வினாடியிலும் என் சரீரத்திற்குள் அற்புதமாக நடந்துகொண்டிருக்கிறது! ஆமென்.

---

ஏசாயா 53:3-5

"அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய

*துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமி த்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *மெய்யாகவே, இயேசு என் வியாதிகளையும் பலவீனங்களையும் தம்மீது ஏற்றுக்கொண்டு, என் வேதனை களைச் சுமந்து தீர்த்தார்.*
- *அவர் என் பிணிகளைச் சுமந்து சிலுவையில் தூரமாக்கிவிட்டார்; அவர் எனக்காகச் சுமந்து தீர்த்ததை, இனி நான் ஒருபோதும் சுமக்க வேண்டியதில்லை!*
- *இயேசு ஏற்கனவே எனக்காகச் சுமந்துவி ட்ட எந்த வியாதியையும், சாத்தான் இனி என்மீது திணிக்க முடியாது.*
- *அவருடைய தழும்புகளால் நான் பூரண சுகமாகிறேன். அவர் சிந்திய இரத்தத் தாலும், அவருடைய காயங்களாலும்*

*நான் என் சுகத்தைப் பெற்றுக் கொண்டேன்.*

- *எனக்குச் சமாதானத்தையும் பரிபூரண ஆரோக்கியத்தையும் தரவே அவர் ஆக்கினையை அடைந்தார். அவரைக் காயப்படுத்திய அந்த அடிகளாலே, நான் என் சரீரத்தில் முற்றிலும் பரிபூரணமாகிறேன்.*
- *என் வியாதிகள் அனைத்தும் இயேசுவோடு சிலுவைக்குச் சென்று, அங்கேயே என்றென்றைக்குமாக மரித்துவிட்டன!*
- *சாத்தானே, நீ தவறான நபரை நெருங்குகிறாய்! என்மேல் கைவைக்க உனக்கு எந்த அதிகாரமும் இல்லை.*
- *இயேசு என் வியாதியைச் சுமந்து தீர்த்துவிட்டார்; அவருடைய தழும்புகளால் நான் முற்றிலுமாகக் குணமாகிவிட்டேன்! ஆமென்.*

---

*மத்தேயு 8:16-17*

"*அஸ்தமனமானபோது, பிசாசுபிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே*

நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொ ண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக உரைக்கப்பட்ட இந்த ஜீவனுள்ள வார்த்தைக்காக உமக்கு ஸ்தோத்திரம் பிதாவே!*
- *இயேசு தாமே என்னுடைய பலவீனங் களை ஏற்றுக்கொண்டு, என் வியாதிகள் அனைத்தையும் தம்மேல் சுமந்து தீர்த்தார்.*
- *அவர் என் வியாதிகளை என்னைவிட்டு முற்றிலுமாக அகற்றிவிட்டார். வியாதி இனி என்னுடையதல்ல; பரிபூரண சுகமே என்னுடையது!*
- *இயேசு எனக்காகச் சுமந்ததை, நான் மீண்டும் ஒருமுறை சுமக்க வேண்டியதி ல்லை. அவர் எனக்காக ஏற்றுக்கொண்ட எந்தப் பாடுகளையும் நான் ஏற்க வேண்டிய அவசியமே இல்லை!*
- *சாத்தானே, நீ இனி என்மேல் எந்த வியாதியையும் கொண்டுவர முடியாது. ஏனென்றால், இயேசு என்*

*வியாதிகளையும் பலவீனங்களையும் சிலுவையில் சுமந்து முடித்துவிட்டார்.*

- *நான் இனி எந்த வியாதியையும் பெற்றுக்கொள்ளவோ, நோயைச் சகித்துக் கொண்டு வாழவோ வேண்டியதில்லை.*
- *நோயும் பலவீனமும் என் சரீரத்தில் ஒட்டிக்கொள்ள நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்; அவை எனக்குள் முற்றிலும் நிராகரிக்கப்பட்டவைகள்!*
- *என் இயேசு என் பிணிகள் அனைத்தையும் சுமந்துவிட்டபடியால், நான் இப்போதே பரிபூரண சுகத்தோடு வாழ்கிறேன்! ஆமென்.*

---

*1 பேதுரு 2:24*

*"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *கிறிஸ்து இயேசுவின் தழும்புகளால் நான் என்றென்றைக்குமாகச் சுகமானேன்! பரிபூரண சுகம் முற்றிலும் என்னுடையதே.*

- *இனிமேல் புதிதாகச் சுகத்தைப் பெற்றுக் கொள்ள நான் எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை; ஏனென்றால், நான் ஏற்கனவே என் சுகத்தைப் பெற்றுவிட்டேன்!*
- *சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே, கல்வாரிச் சிலுவையில் இயேசு சுமந்த தழும்புகளால் நான் முற்றிலுமாகக் குணமாக்கப்பட்டுவிட்டேன்!*
- *ஏதோ ஒரு காலத்தில் நான் சுகமாவேன் என்பதல்ல, நான் ஏற்கனவே குணமாக்கப் பட்டவன் (I WAS healed) என்பதே மாறாத சத்தியம்.*
- *என் இயேசுவின் தழும்புகளால் நான் பரிபூரண குணம் அடைந்தேன்! ஆமென்!*

---

*கலாத்தியர் 3:13*
*"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *கிறிஸ்து தாமே எனக்காகச் சாபமாக மாறி, என்னை நியாயப்பிரமாணத்தின்*

*சாபத்திலிருந்து முற்றுமுழுதாக மீட்டுக் கொண்டார்!*

- *உபாகமம் **28**-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, தேவனுடைய பிரமா ணங்களை மீறுவதினால் வரும் சாபங்க ளில் சகல வியாதிகளும் நோய்களும் அடங்கும்.*
- *வியாதியும் நோயும் அந்த நியாயப் பிரமாணச் சாபத்தின் ஒரு பகுதியாக இருப்பதால், கிறிஸ்து என்னை சகல வியாதிகளிலிருந்தும் மீட்டுக்கொண்டார் என்று ஆணித்தரமாக விசுவாசிக்கிறேன்!*
- *நான் விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன்! நான் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கிரயத்திற்குக் கொள்ளப்பட் டிருக்கிறேன்! நான் நோயின் பிடியிலி ருந்து முற்றிலுமாக விடுதலையாகி விட்டேன்!*
- *நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதப்ப ட்டிருக்கிற எல்லாவிதமான நோய்களிலிரு ந்தும் நான் மீட்கப்பட்டிருக்கிறேன்.*
- *குறிப்பாக, **[உங்களை வாதிக்கும் வியாதியின் பெயரைக் கட்டளையிட்டுச் சொல்லவும்]** என்ற இந்த*

*வியாதியிலிருந்தும் நான் முற்றிலுமாக மீட்கப்பட்டுவிட்டேன்!*

- *அதுமட்டுமல்ல, நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் பெயர் எழுதப்படாத மற்றெந்தப் புதிய நோய்களிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் நான் முழுமையாக விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன்.*
- *கிறிஸ்து என்னை என்றென்றைக்குமாக மீட்டுக்கொண்டார்; சகல வியாதிகளிலிருந்தும், நோய்களிலிருந்தும் என்னை விடுவித்துத் தம்முடைய பரிபூரண சுகத்திற்குள் கொண்டுவந்துவிட்டார்! ஆமென்.*

---

கொலோசெயர் 1:14
"(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."

---

**விசுவாச அறிக்கையிடல்:**

- *இயேசு கிறிஸ்துவுக்குள், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே எனக்கு மாபெரும் மீட்பு உண்டாயிருக்கிறது!*
- *சாத்தானின் சகலவிதமான அடிமைத்தனத்திலிருந்தும் நான் என்றென்றைக்குமாக மீட்கப்பட்டிருக்கிறேன்.*

## குணமாக்கும் வேத மாத்திரை

- *நான் சாத்தானிடமிருந்தும், அவனுடைய கொடிய இருளின் கிரியைகளிலிருந்தும் முற்றுமுழுதாக விடுதலையாக்கப்பட்டிருக் கிறேன்.*
- *இயேசுவின் இரத்தம் எனக்குப் பாவமன்னிப்பை மட்டுமன்றி, சரீரத்தின் சகல வியாதிகளிலிருந்தும் நோய்களிலிருந் தும் பரிபூரண விடுதலையையும் தந்திருக் கிறது!*
- *என் மாம்ச சரீரத்தில் நான் எந்த வியாதியையும் சுமக்க வேண்டியதில்லை; நான் முற்றிலுமாக மீட்கப்பட்டுவிட் டேன்.*
- *எனக்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்திற்கே மகிமை உண்டாவதாக! ஆமென்.*

# 2. மருந்து – வார்த்தையின் வல்லமையும் விசுவாசமும்

*நீதிமொழிகள் 4:20-22*
*"என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களைவிட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும் அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்."*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *தேவனுடைய வார்த்தை என் முழுச் சரீரத்திற்கும் பரிபூரண ஆரோக்கியமாக இருக்கிறது!*
- *அவருடைய ஜீவனுள்ள வார்த்தையே என் உடலின் சகல வியாதிகளையும் நீக்கும் அருமருந்தாகச் செயல்படுகிறது.*
- *"நானே உன்னைக் குணமாக்கும் கர்த்தர்" என்ற அவருடைய வாக்குத்தத்தம் என் சரீரத்திற்கு அற்புத மருந்தாக இருக்கிறது.*

- "உன்னைவிட்டு வியாதியை விலக்குவேன்" என்ற அவருடைய வார்த்தை எனக்கு சுகமளிக்கும் ஜீவ மாத்திரையாக இருக்கிறது.
- தேவனுடைய வார்த்தைக்கு ஜீவனும், எப்பேர்ப்பட்ட வியாதியையும் வேரறுக்கும் வல்லமையும் உண்டு!
- அந்தத் தெய்வீக ஜீவன் என் ஆவியை நிரப்பி, எனக்குள்ளே இப்போது வல்லமையாகக் கிரியை செய்துகொண்டிருக்கிறது.
- அந்த ஜீவனுள்ள வார்த்தை என் ஆவிக்குள் தேவனுடைய ஜீவனையும், தெய்வீக ஆரோக்கியத்தையும் ததும்பி வழியச் செய்கிறது.
- என் ஆவிக்குள் ஊற்றப்பட்ட அந்த ஜீவனும் சுகமும், அங்கிருந்து புறப்பட்டு என் சரீரத்தின் ஒவ்வொரு அணுக்களிலும், ஒவ்வொரு திசுக்களிலும் பாய்ந்து பூரண ஆரோக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.
- எனக்குள் ஆழமாக உட்புகுந்து வரும் அந்த வார்த்தையின் தெய்வீகச் சுகத்தை என் சரீரம் இப்போது முழுமையாக ஈர்த்துப் பெற்றுக்கொள்கிறது. ஆமென்!

*நீதிமொழிகள் 12:18*
*"பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு; ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஒளஷதம் (மருந்து)."*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *தேவனுடைய வார்த்தைகளைப் பேசும் என் நாவு, என்னைக் குணமாக்கும் ஒளஷதமாக (மருந்தாக) மாறுகிறது!*
- *நான் விசுவாசத்தோடு எதை அறிக்கையிடுகிறேனோ, அதையே என் சரீரத்தில் பரிபூரணமாகப் பெற்றுக்கொள் கிறேன்.*
- *"தேவனாகிய கர்த்தரே என் வைத்தியர்" என்று நான் தைரியமாக அறிக்கையிடு கிறேன்.*
- *"அவர் சகல வியாதிகளையும் என்னைவி ட்டு முற்றிலுமாக விலக்குகிறார்" என்று நான் அறிக்கை செய்கிறேன்.*
- *"எந்த வாதையும் என் சரீரமாகிய கூடார த்தை அணுகவே அணுகாது" என்று நான் விசுவாசத்தோடு அறிக்கையிடுகிறேன்.*
- *"அவர் என் எல்லா வியாதிகளையும் குணமாக்குகிறார்" என்று நான் ஆணித்தரமாக அறிக்கையிடுகிறேன்.*

- *என் வார்த்தைகளுக்கு என்னைக் குணமாக்கும் வல்லமை உண்டு; ஏனென்றால், என் வாயிலிருந்து புறப்படுபவை வெறும் வார்த்தைகள் அல்ல, அவை ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள்!*
- *என் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு நரம்பிற்கும், தசைக்கும், திசுவிற்கும், ஒவ்வொரு அணுவிற்கும் (cell) பரிபூரண சுகம் உண்டாகட்டும் என்று நான் அதிகாரத்தோடு அறிக்கையிடுகிறேன்.*
- *தேவனுடைய சுகமளிக்கும் வல்லமை என் சரீரத்திற்குள் ஆழமாக உட்புகுந்து பாயும்படி, தேவ வார்த்தைகளினாலே நான் விசுவாசத்தோடு அறிக்கையிடு கிறேன். ஆமென்!*

---

*நீதிமொழிகள் 17:22*
"மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்."

---

**விசுவாச அறிக்கையிடல்:**

- *அல்லேலூயா! என் இருதயம் கர்த்தருக்குள் எப்பொழுதும் களிகூருகி றது!*

- *எந்தப் பலவீனமும் என்னை ஆட்கொள்ள முடியாது; சத்துரு ஒருபோதும் என்னை மேற்கொள்ள முடியாது!*
- *சாத்தானே, என் சரீரத்தின் மேல் உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. உன்னால் என்மேல் எந்த வியாதியையும் கொண்டுவரவே முடியாது!*
- *அல்லேலூயா! என் இருதயம் கர்த்தர் தரும் விவரிக்க முடியாத சந்தோஷத் தினால் நிரம்பியிருக்கிறது. எனக்குள் முறிந்த ஆவிக்கோ, சோர்வுக்கோ அறவே இடமில்லை!*
- *என் உள்ளத்திலிருக்கும் இந்தக் கர்த்தரு டைய சந்தோஷமே, என் முழு உடலுக்கும் அருமருந்தாகச் (ஔஷதமாக) செயல்படுகிறது.*
- *தேவன் எனக்கு அருளிய இந்த மாபெரும் ஔஷதம், இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்து பரிபூரண ஆரோக்கியத்தைக் கொண்டுவருகிறது. ஆமென்!*

---

*சங்கீதம் 107:20*

"*அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.*"

---

**விசுவாச அறிக்கையிடல்:**

- *தேவன் தமது ஜீவனுள்ள வார்த்தையை அனுப்பி என்னை முற்றிலுமாகக் குணமாக்கிவிட்டார்!*
- *அவருடைய வல்லமையான வார்த்தை என்னைக் குணமாக்கி, எல்லாவிதமான அழிவுகளுக்கும், வியாதிகளுக்கும் என்னை நீங்கலாக்கி விடுவிக்கிறது.*
- *எனக்கு விரோதமாக வரும் சகல பொல்லாப்புகளிலிருந்தும் தேவனுடைய வார்த்தை என்னைப் பாதுகாத்துக் காக்கிறது.*
- *ஏசாயா 55:10-11-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி, கர்த்தருடைய வார்த்தை எதைச் சொல்லுகிறதோ, அதை அப்படியே என் சரீரத்தில் நிறைவேற்றும் மாபெரும் வல்லமையுடையதாய் இருக்கிறது.*
- *அவருடைய வார்த்தைக்கு மெய்யான சுகமாக்கும் வல்லமை உண்டு; அந்த வார்த்தையே இப்போது என்னைச் சுகமாக்கிக் கொண்டிருக்கிறது.*
- *தேவனுடைய குணமாக்கும் வார்த்தை இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்துகொண்டிருக்கிறது.*

- *அன்பின் பிதாவே, நீர் உமது வார்த்தையாகிய மருந்தை அனுப்பி என்னைச் சுகமாக்கினபடியால், உமக்குக் கோடானு கோடி ஸ்தோத்திரம்! ஆமென்.*

---

*சங்கீதம் 30:2 & மாற்கு 11:24*
*"என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்."*
*"ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *என் தேவனாகிய கர்த்தாவே, நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது நீர் எனக்குச் செவிசாய்த்து என்னைக் குணமாக்கிவிட்டீர்!*
- *என் சரீரத்திற்குத் தேவையான பரிபூரண சுகத்தை நான் இப்போதே பெற்றுக் கொண்டுவிட்டேன் என்று ஆணித்தரமாக விசுவாசிக்கிறேன்.*
- *நான் ஜெபத்தில் கேட்டபடியே, என் சுகம் எனக்கு உண்டாயிற்று என்று*

*விசுவாசித்து அதை இருகரம் கூப்பிப் பெற்றுக்கொள்கிறேன்.*

- *நீர் என்னை முற்றுமுழுதாகக் குணமாக்கி விட்டபடியால், நான் இப்போது எவ்விதக் குறையுமின்றிப் பூரண ஆரோக்கியத்தோடு இருக்கிறேன் என்று அறிக்கையிடுகிறேன்!*
- *என் ஜெபத்தைக் கேட்டு, எனக்கு அற்புதத்தைச் செய்தவரே, உமக்கே எல்லாத் துதியும் மகிமையும் உரித்தாக ட்டும். ஆமென்.*

---

*சங்கீதம் 42:11*

*"என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்துக்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *என் ஆத்துமாவே, நீ இனி கலங்கமா ட்டாய்; எனக்குள் இனி தியங்கமாட் டாய்!*
- *நான் கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் ஜெயங்கொள்ளுகிறவன்; நான் திகைக்க மாட்டேன்.*

- *என் தேவனை நோக்கியே என் கண்கள் காத்திருக்கின்றன. என் முகத்திற்கு இரட்சிப்புமானவரை நான் என் வாழ்நாளெல்லாம் துதிப்பேன்.*
- *என் முகத்திற்கு இரட்சிப்பாயிருக்கிற அன்பின் பிதாவே, என் கலக்கங்களை நீக்கி எனக்குச் ஜெயத்தைத் தந்ததற்காய் உம்மை முழு இருதயத்தோடு துதிக்கி றேன்!*

---

*மல்கியா 4:2*

"*ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.*"

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *நீதியின் சூரியனாகிய என் கர்த்தர், என் வாழ்வில் வல்லமையாக உதித்தெழுந்திருக் கிறார்!*
- *அவர் சாத்தானையும், எல்லாவிதமான வியாதிகளையும் முற்றிலுமாக மேற்கொ ண்டு ஜெயமெடுத்திருக்கிறார்.*

- *அவருடைய வல்லமையான செட்டைக ளின் கீழ் எனக்குப் பரிபூரண ஆரோக்கியம் உண்டு.*
- *தேவனுடைய ஜீவ வார்த்தையினாலே, அந்தத் தெய்வீக ஆரோக்கியம் இப்போது என் சரீரத்திற்குள் நதியாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது.*
- *மெய்யான ஆரோக்கியத்தை உண்டாக்கும் அவருடைய செட்டைகளின் கீழே நான் எவ்விதப் பயமுமின்றி, முழு நம்பிக்கை யோடு அடைக்கலம் புகுந்திருக்கிறேன்.*
- *தேவன் அருளும் இந்த ஆரோக்கியத் தினால், நான் கொழுத்த கன்றுகளைப் போல நாளுக்கு நாள் பெலனடைந்து கர்த்தருக்குள் வளருவேன். ஆமென்!*

---

*மாற்கு 5:25...34*

*"அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ... இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட் டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி*

ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்... இயேசு அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்."

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *அந்தப் பெண்ணின் விசுவாசம் எப்படி அவளைக் குணமாக்கியதோ, அதேபோல என் விசுவாசமும் என்னை இப்போது இரட்சித்துக் குணமாக்குகிறது!*
- *நான் என் பரிபூரண சுகத்தை இப்போதே பெற்றுக்கொள்கிறேன் என்று முழுமையாக விசுவாசிக்கிறேன்; என் விசுவாசம் என்னைக் குணமாக்குகிறது.*
- *எபேசியர் **1:19**-ன்படி, கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பின அதே மாபெரும் வல்லமை இப்போது என் சரீரத்திற்குள் கிரியை செய்துகொண் டிருக்கிறது.*
- *அந்த உயிர்த்தெழுதலின் வல்லமை என் விசுவாசத்தோடு இணையும்போது, அது என் சரீரத்தில் அதிவிரைவான சுகத்தை நடப்பிக்கிறது!*

- *என் சரீரத்தில் இனி எந்த வியாதிக்கும், பலவீனத்திற்கும் சற்றும் இடமில்லை; வியாதி தங்கி நிற்க வேறு வழியே இல்லை!*
- *இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின அந்த வல்லமை, எந்த வியாதியையும் பலவீனத்தையும் விட மகா பெரியது!*
- *அந்தத் தெய்வீக வல்லமை இப்போது எனக்குள் நதியாகப் பாய்ந்து, என்னை முழுமையாகச் சுகமாக்கிக் கொண்டிருக்கிறது.*
- *நான் சகல வியாதிகளிலிருந்தும் முற்றிலுமாக விடுதலையாகிவிட்டேன்! என் விசுவாசம் என்னைக் குணமாக்கிற்று! ஆமென்.*

---

*யாக்கோபு 5:15-16*

*"அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும்*

ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *விசுவாசத்தோடு ஏறெடுக்கப்படும் இந்த ஜெபம் என்னை முற்றிலுமாகக் குணமாக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்!*
- *கர்த்தர் தாமே என்னை என் வியாதிப் படுக்கையிலிருந்து வல்லமையாகத் தூக்கி எழுப்புகிறார்.*
- *கர்த்தர் என்னை எழுப்புவதால், நான் இனி பலவீனனாய் வியாதியோடு கீழே படுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை!*
- *என் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப் பட்டுவிட்டன; இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நான் முற்றிலுமாக நீதிமானாக்கப்பட்டு இருக்கிறேன்.*
- *கிறிஸ்துவுக்குள் நீதிமானாகிய நான் செய்யும் இந்த ஊக்கமான விசுவாச ஜெபம், என் சரீரத்தில் மாபெரும் அற்புதத்தைச் செய்யும் பெலனுள்ளதாய் இருக்கிறது!*

- *நான் ஜெபித்த அந்த வினாடியிலேயே என் பரிபூரண சுகத்தைப் பெற்றுக் கொண்டேன் என்று முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன்.*
- *என் விசுவாசம் என்னைப் பூரண சுகமாக்கிற்று! நான் என் சுகத்தை இப்போதே பெற்றுக் கொள்கிறேன். ஆமென்!*

# 3. நமது அடையாளம் — கிறிஸ்துவோடு இணைந்திருத்தல்

---

*1 கொரிந்தியர் 6:13, 15, 19-20*
*"சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்... உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? ... உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்திற்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *என் சரீரம் தேவனுக்கென்று படைக்கப் பட்டதே தவிர, பாவத்திற்காகவோ*

*வியாதிக்காகவோ ஒருபோதும் உண்டாக்கப்படவில்லை!*

- *என் சரீரம் கர்த்தருக்கே உரியது; அது சாட்சாத் கிறிஸ்துவின் அவயவங்களாகவே இருக்கிறது.*
- *என் சரீரம் முற்றுமுழுதாகக் கிறிஸ்துவினுடையது. ஆகையால், சாத்தானால் இனி கிறிஸ்துவின் சரீரத்தை எந்த விதத்திலும் பலவீனப்படுத்த முடியாது.*
- *சாத்தானே, தேவனுடைய சுதந்தரத்தை உன்னால் ஒருபோதும் தீட்டுப்படுத்த முடியாது. இயேசுவின் நாமத்தில், தேவனுக்குச் சொந்தமான என் சரீரத்தின் மேலிருந்து உன் அசுத்தமான கைகளை உடனே எடு!*
- *என்னைக் குணமாக்கும் தேவனாகிய கர்த்தர் வாசம் செய்யும் பரிசுத்த ஆலயம் என் சரீரமே.*
- *அவர் சுகமாக்கும் தேவனாயிருப்பதால், அவர் இப்போதே எனக்குள் தெய்வீகச் சுகத்தைப் பரிபூரணமாக உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறார்.*
- *நான் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்திற்குக்*

கொள்ளப்பட்டிருக்கிறேன். அந்த இரத்தம் என்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் சுத்திகரித்துள்ளது; அவருடைய தழும்புகளால் நான் பூரண குணமாகிறேன்.

- ஆகையால், என் ஆவியினாலும் என் சரீரத்தினாலும் நான் என் தேவனை மட்டுமே மகிமைப்படுத்துவேன்.
- இயேசுவின் நாமத்தினாலே, எந்த வியாதியும் என் சரீரத்திற்குள் வராதபடிக்கு நான் அதை அதிகாரத்தோடு எதிர்த்து நிற்கிறேன்.
- கொடிய வியாதியே, இயேசுவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்: உன் கையை என் சரீரத்திலிருந்து இப்போதே முற்றிலுமாக எடு! ஆமென்.

---

*கலாத்தியர் 2:20*

*"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *பழைய மனிதனாகிய நான், கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டுவிட்டேன்!*
- *ஆகையால், அவரோடுகூட நானும் சகல வியாதிகளுக்கும், நோய்களுக்கும் முற்றிலுமாக மரித்துவிட்டேன். மரித்த ஒரு சரீரத்தின் மேல் வியாதிக்கு எந்த அதிகாரமும் இல்லை!*
- *ஆயினும் நான் பிழைத்திருக்கிறேன்; இனி வாழ்வது பலவீனமான நான் அல்ல, என்னைக் குணமாக்கும் கர்த்தராகிய கிறிஸ்துவே எனக்குள் வல்லமையாக வாழ்கிறார்!*
- *பரிபூரண சுகம் இப்போது எனக்குள்ளேயே வாசம்பண்ணுகிறது; ஏனென்றால், சுகமாக்குகிற கிறிஸ்து என் சரீரத்திற்குள் நிரம்பியிருக்கிறார்.*
- *என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே, எனக்குள் இருக்கும் கிறிஸ்து என் சரீரத்தை ஒவ்வொரு நாளும் உயிர்ப்பித்துச் சுகமாக்கிக் கொண்டே இருக்கிறார்.*

- *என் மாம்ச சரீரம் இப்போது கிறிஸ்து வாழும் ஆரோக்கியமான ஆலயமாக மாறிவிட்டது! ஆமென்.*

---

*யோவான் 15:4-5*

*"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்; ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *நான் என் கர்த்தராகிய கிறிஸ்துவோடு கூடப் பிரிக்க முடியாதபடி உறுதியாக இணைந்துள்ளேன்!*
- *என்னைக் குணமாக்கும் ஜீவனுள்ள கிறிஸ்துவோடுகூட என் ஆவி முற்றுமுழுதாக ஒன்றாயிருக்கிறது.*
- *நான் சுகமாக்குகிற மெய்யான திராட்சச் செடியுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு ஜீவனுள்ள கொடியாயிருக்கிறேன்!*

- *செடியிலிருந்து கொடிக்குச் சாறு பாய்வதுபோல, திராட்சச்செடியாகிய இயேசுவிடமிருந்து வரும் அந்தச் சுகமளிக்கும் மாபெரும் வல்லமையை நான் இப்போதே என் சரீரத்திற்குள் ஈர்த்துக்கொள்கிறேன்.*
- *அந்தத் தெய்வீக வல்லமை என் சரீரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பரிபூரண சுகமாக வெளிப்படுகிறது.*
- *நான் சுகமாக்கும் கிறிஸ்துவுடன் என்றென்றைக்கும் இணைக்கப்பட்டிருக் கிறேன்; ஆகையால், செடியில் இல்லாத எந்த வியாதியும் கொடியாகிய என்னிலும் இருக்க முடியாது!*
- *என் இயேசுவின் ஜீவனும், அவருடைய பரிபூரண ஆரோக்கியமும் எனக்குள் எந்நேரமும் தங்கியிருக்கிறது! ஆமென்.*

---

*கொலோசெயர் 1:12*

*"ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கின பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *கிறிஸ்துவுக்குள் எனக்கு அருளப்பட்ட மாபெரும் சுதந்தரத்தைப் (Inheritance) பெற்றுக்கொள்வதற்கு நான் முற்றிலும் தகுதியுடையவன்; அதற்கான முழு உரிமையும் அதிகாரமும் எனக்கே உண்டு!*
- *சங்கீதம் **103:3**-ல் தேவனுடைய வார்த்தை கூறுகிறபடி, 'பரிபூரண சுகம்' என்பது கிறிஸ்து எனக்குச் சம்பாதித்துத் தந்த சுதந்தரத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும்.*
- *ஆம், சுகமாக்குதல் முற்றிலும் எனக்கே உரியது!*
- *என் பிதா எனக்கு அளித்த இந்தத் தெய்வீகச் சுதந்தரத்திலிருந்து என்னை அடித்து விரட்டவோ, என் சுகத்தை என்னிடமிருந்து திருடவோ நான் பிசாசுக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்!*
- *சாத்தான் என்னைத் ஏமாற்றுவதை நான் வன்மையாக மறுக்கிறேன்! என் சுதந்தரத்தை நான் இப்போதே முழுமையாகப் பற்றிக்கொள்கிறேன்.*
- *ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் என்னை இருத்தின அன்பின் பிதாவே, உமக்கு ஸ்தோத்திரம்! ஆமென்.*

*பிலிப்பியர் 2:13*
*"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்."*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *சர்வவல்லமையுள்ள தேவன் தாமே இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்துகொண்டிருக்கிறார்!*
- *என்னைக் குணமாக்கும் கர்த்தராகிய 'யெகோவா ரஃப்பா' என் சரீரத்திற்குள் தம்முடைய ஜீவனைப் பாய்ச்சிக்கொண்டி ருக்கிறார்.*
- *என் தேவன் பிசாசைக் காட்டிலும் மகா பெரியவர்! தேவன் அருளும் தெய்வீகச் சுகம், உலகத்திலுள்ள எந்த வியாதியையும் விட மாபெரும் வல்லமையுடையது.*
- *நான் பரிபூரண ஆரோக்கியத்தோடு வாழவேண்டும் என்ற தம்முடைய தயவுள்ள சித்தத்தை என் சரீரத்தில் நிறைவேற்ற, தேவன் தாமே எனக்குள் அற்புதம் செய்துகொண்டிருக்கிறார்.*

- *என் தேவனுடைய வல்லமையான கிரியையினால், நான் இப்போதே பூரண சுகம் அடைகிறேன்! ஆமென்.*

---

*ரோமர் 8:2*

*"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *தேவனுடைய ஆவியானவர் இப்போது எனக்குள் வல்லமையாக வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.*

- *என்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் பரிசுத்த ஆவியானவரே முழுமையாக ஆண்டுகொண்டிருக்கிறார்.*

- *என்னைக் குணமாக்கும் தேவன் என் சரீரத்திற்குள் தம்முடைய தெய்வீக ஜீவனை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்; அவர் என் சரீரத்தை உயிர்ப்பித்து முற்றுமுழுதாகக் குணமாக்கிக்கொண்டிருக்கிறார்.*

- *எனக்குள் வாசம் செய்யும் **'யெகோவா ரஃப்பா'**வாகிய தேவனுடைய ஆவியானவர், என் மாம்ச சரீரத்திற்குள்*

பரிபூரண ஜீவனைக் கட்டவிழ்த்து விடுகிறார்.

- தேவனுடைய அந்த மாபெரும் ஜீவன், ஒவ்வொரு வியாதியின் சுவடுகளையும் என்னைவிட்டு வெகுதூரத்திற்கு விரட்டியடித்துக்கொண்டிருக்கிறது.
- தேவனுடைய ஜீவன் எனக்குள் வல்லமையாகப் பாய்ந்து, எல்லா வியாதிகளையும், நோயை உண்டாக்கும் அனைத்துக் கிருமிகளையும் (germs) வேரோடு அழித்துக்கொண்டிருக்கிறது! ஆமென்.

# 4. ஆவிக்குரிய யுத்தமும் அதிகாரமும்

---

*சங்கீதம் 91:1-6*

*"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

## குணமாக்கும் வேத மாத்திரை

- நான் உன்னதமானவராகிய கர்த்தரின் மறைவில் இருக்கிறேன்; சர்வவல்லவருடைய நிழல் என்மேல் எப்பொழுதும் தங்கியிருக்கிறது.
- கர்த்தரே என் அடைக்கலமானவர்; அவரே என் அரணான கோட்டையும், நான் முழுமையாக நம்பியிருக்கிற என் தேவனுமாயிருக்கிறார்.
- எவ்விதமான பாழாக்கும் கொள்ளைநோய்க்கும், வியாதிகளுக்கும் அவர் என்னை முற்றிலுமாகத் தப்புவித்துக் காக்கிறார்.
- அவருடைய சிறகுகளாலே அவர் என்னை மூடியிருக்கிறார்; அவருடைய செட்டைகளின் கீழே நான் பாதுகாப்பாய் அடைக்கலம் புகுந்திருக்கிறேன்.
- அவருடைய சத்தியமான வார்த்தையே எந்த வியாதியும் என்னைத் தொடாதபடி காக்கும் கேடயமாக இருக்கிறது.
- இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கோ, பகலில் வரும் சங்காரத்துக்கோ நான் ஒருபோதும் பயப்படமாட்டேன். என் தேவன் என்னைப் பாதுகாக்கிறார்! ஆமென்.

*சங்கீதம் 91:9-10*
*"எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது."*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *என்னைக் குணமாக்கும் 'யெகோவா ரஃப்பா'வாகிய என் தேவனாகிய கர்த்தரே, எந்த வியாதிக்கும் எதிராக எனக்கு அடைக்கலமும் அரணான கோட்டையுமாயிருக்கிறார்.*
- *அவருடைய வார்த்தையே எனக்குக் கேடயமும், வியாதிக்கு எதிரான என்னுடைய வலிமையான ஆயுதமுமாக இருக்கிறது.*
- *மல்கியா 4:2-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி, "அவருடைய செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கிறது" என்று நான் முழுமையாக விசுவாசிக்கிறேன்; அந்தச் செட்டைகளின் கீழே நான் பாதுகாப்பாய் அடைக்கலம் புகுந்திருக்கிறேன்.*
- *நான் எந்த வியாதியைக் கண்டும் பயப்படமாட்டேன்; எந்தப் பலவீனத்தைக் கண்டும் அஞ்சமாட்டேன்.*

## குணமாக்கும் வேத மாத்திரை

- என்னைக் குணமாக்கும் யெகோவா ரஃப்பாவின் நிழலிலே நான் தங்கியிருப்பதால், எந்தக் கொள்ளை நோயும் என் வீட்டையோ, என் சரீரமாகிய கூடாரத்தையோ ஒருபோதும் அணுகவே அணுகாது!
- நான் நோயையும் வியாதியையும் இயேசுவின் நாமத்தில் தைரியமாக எதிர்க்கிறேன். அவற்றை என் சரீரத்தில் ஏற்றுக்கொள்ள நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்; அவை எனக்குரிய வை அல்ல!
- இயேசுவின் நாமத்தினாலே நான் பெலவீனனாயிருக்க மாட்டேன். எந்த வியாதியும் என் சரீரத்திற்குள் உட்புக அதிகாரம் இல்லை.
- வியாதியே! ***[உங்களை வாதிக்கும் வியாதியின் பெயரை இங்கே கட்டளையிட்டுச் சொல்லவும்]*** நீ என் கூடாரத்தை நெருங்க முடியாது! நான் உன்னை முற்றிலுமாகப் புறக்கணிக்கிறேன்; இயேசுவின் நாமத்தில் உனக்கு விரோதமாய் நின்று உன்னைத் துரத்துகிறேன்!

---

*அப்போஸ்தலர் 10:38*
*"நசரேனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *வியாதி என்பது தேவனிடமிருந்து வருவதல்ல; அது சாத்தானுடைய ஒடுக்குதல் என்பதை நான் திட்டவட்டமாக அறிவேன்.*
- *ஆனால், சாத்தான் இனிமேல் வியாதியைக் கொண்டு என்னை ஒருபோதும் ஒடுக்க முடியாது!*
- *ஏனென்றால், கொலோசெயர் 1:13-ன்படி நான் சாத்தானின் இருளின் அதிகாரத்தினின்று முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டு விட்டேன்.*
- *சாத்தானையும், பிசாசுகளையும், சத்துருவின் சகல வல்லமைகளையும் மிதிக்க எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இயேசுவின் நாமத்தில்*

*வியாதியை நான் என் காலின்கீழ் நசுக்குகிறேன்!*

- *சாத்தானே, எந்தவொரு கொடிய வியாதியைக் கொண்டும் உன்னால் என்னை உன் அதிகாரத்திற்கு உட்படுத்த முடியாது. என்னைக் கட்டிப்போட உனக்கு எந்த உரிமையும் இல்லை!*
- *வியாதியே, என் சரீரத்தில் உனக்கு எந்த வேலையும் இல்லை; நீ முற்றிலும் தவறான நபரிடத்தில் வந்திருக்கிறாய்!*
- *பரிபூரண சுகமே என்னுடையது! இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பின அதே மாபெரும் வல்லமை இப்போது எனக்குள் வல்லமையாகக் கிரியை செய்துகொண்டிருக்கிறது.*
- *என்னைக் குணமாக்கும் தேவனாகிய கர்த்தரின் வல்லமை என் சரீரத்தில் பாய்ந்து கொண்டிருப்பதால், நான் சகல வியாதிகளிலிருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்டிருக்கிறேன்! ஆமென்.*

---

*லூக்கா **13:11-13, 16***

*"அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு*

*அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்... இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் நான் முற்றிலுமாகச் சுகமானேன்! சாத்தான் இனி என்னை வியாதி என்னும் கட்டினால் ஒருபோதும் கட்டிவைக்க முடியாது.*
- *கொலோசெயர் **1:13**-ன்படி, நான் சாத்தானின் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன் என்று ஆணித்தரமாக விசுவாசிக்கிறேன்.*
- *வியாதி தேவனிடமிருந்து வருவதல்ல; வியாதி சாத்தானுடையது! ஆகையால் சாத்தானே, என்மீது வியாதியைக்*

*கொண்டுவர உனக்கு எந்த உரிமையும் இல்லை!*

- *நீ உன்னை யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? கொலோசெயர் **2:15** மற்றும் எபிரெயர் **2:14** வசனங்களின்படி நீ சிலுவையில் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்பட்டவன்!*
- *என்மேலிருந்த உன்னுடைய சகல அதிகாரங்களையும் இயேசு கிறிஸ்து உரிந்துகொண்டார். எனவே, இயேசுவின் நாமத்தினாலே நான் உனக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிறேன்!*
- *நான் கட்டவிழ்க்கப் பட்டிருக்கிறேன்! நான் விடுதலையாக்கப் பட்டிருக்கிறேன்! நான் இனி ஒருபோதும் வியாதியினால் கட்டப்பட்டவன் அல்ல!*
- *கலாத்தியர் **3:14, 29** வசனங்களின்படி, நான் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறேன்; எனவே ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் எனக்கே உரியவை.*
- *ஆபிரகாமின் பிள்ளையாகிய நான், இந்த வியாதியின் கட்டிலிருந்து முற்றிலுமாக விடுதலையாக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்!*

- *பரிபூரண சுகம் என்பது தேவனுடைய உடன்படிக்கையில் எனக்கான மாபெரும் பங்கு; அது எனது பிறப்புரிமை (Rightful inheritance)! அதை நான் இப்போதே முழுமையாகச் சுதந்தரித்துக்கொள்கிறேன்.*
- *சாத்தானே, நான் என் உரிமைகளை இப்போதே பெற்றுக் கொள்கிறேன். உடனே உன்னுடைய அசுத்தமான கைகளை என் சரீரத்தை விட்டு எடு! ஆமென்.*

---

*கொலோசெயர் 1:13*
"*இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.*"

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *நான் இருளின் அதிகாரத்தினின்றும், அதன் கொடிய பிடியிலிருந்தும் முற்றிலுமாக விடுதலையாக்கப்பட்டிருக் கிறேன்!*
- *அப்போஸ்தலர் 26:18-ன்படி, நான் சாத்தானுடைய சகல அதிகாரத்தினின்றும், ஆதிக்கத்தினின்றும் முற்றுமுழுதாக மீட்கப்பட்டிருக்கிறேன்.*

- வியாதி என்பது பிசாசினால் உண்டாவது; எனவே, வியாதியைக் கொண்டும் நோயைக் கொண்டும் சாத்தான் இனி என்னை ஒருபோதும் ஆளுகை செய்ய முடியாது!
- சாத்தானே, உன்னுடைய இருளின் அதிகாரத்தினின்று நான் என்றென்றைக்கு மாக விடுவிக்கப்பட்டிருக்கிறேன். இனி நீ என்மேல் எந்த வியாதியையும் போடவே முடியாது!
- நான் உன்னுடைய அதிகார வரம்பிலிருந்து முற்றிலும் தப்பித்து, என் தேவனுடைய அன்பின் குமாரனின் ராஜ்யத்திற்குள் மாற்றப்பட்டுவிட்டேன்.
- என்னைக் குணமாக்கும் கர்த்தராகிய **'யெகோவா ரஃப்பா'**வின் ராஜ்யத்திற்குள் நான் உறுதியாக நட்டப்பட்டிருக்கிறேன்; என் தேவனுடைய ராஜ்யத்தில் வியாதிக்கு எவ்வித இடமும் இல்லை!
- என்னை இருளிலிருந்து மீட்டுத் தமது குமாரனின் சுகமளிக்கும் ராஜ்யத்திற்குள் உட்படுத்தின அன்பின் பிதாவை, நான் முழு உள்ளத்தோடு ஸ்தோத்தரிக்கிறேன். ஆமென்!

*லூக்கா 10:19*
*"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *வியாதி என்பது சத்துருவின் வல்லமையின் வெளிப்பாடு; ஆனால், அந்தச் சத்துருவின் சகல வல்லமைகளையும் இயேசுவின் நாமத்தில் நான் என் காலின்கீழ் நசுக்குகிறேன்!*
- *ஒவ்வொரு பிசாசின் கிரியையையும் நான் அதிகாரத்தோடு மிதிக்கிறேன்.*
- *கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, சத்துருவின் எல்லா வல்லமைகளையும் முறியடிக்கும் மாபெரும் அதிகாரத்தை எனக்குக் கொடுத்திருக்கிறார்.*
- *வியாதியே, உன்னை நான் மிதிக்கிறேன்! நான் உன்னை நசுக்குகிறேன்! நான் உன்னைத் தூளாக்குகிறேன்!*
- *வெளியேறு! வெளியேறு! வெளியேறு! என்மேல் உனக்கு இனி எள்ளளவும் அதிகாரம் இல்லை.*

- இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில், என் சரீரத்தை விட்டு இப்போதே வெளியேறு!
- எபேசியர் **2:6**-ல் சொல்லியபடி, நான் சாத்தானின் சகல வல்லமைகளுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, உன்னதங்களிலே இயேசு கிறிஸ்துவோடேகூட உட்கார வைக்கப்பட்டிருக்கிறேன்.
- ஆகையால், எப்பேர்ப்பட்ட வியாதியும் பலவீனமும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது; அவை என்றென்றைக்கும் என் கால்களின் கீழேயே கிடக்கின்றன! ஆமென்.

---

எபேசியர் 4:27

"பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்."

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- நான் பிசாசுக்கு என் வாழ்வில் எள்முனையளவும் இடம்தர மறுக்கிறேன்!
- சகல வியாதிகளும் நோய்களும் பிசாசினால் உண்டானவை; ஆகையால், என் சரீரத்தில் எந்த வியாதிக்கும் நோய்க்கும் நான் ஒருபோதும் இடம்தர மாட்டேன்.
- சாத்தானே! உன்னுடைய வியாதிகளை என் சரீரத்தின்மேல் உன்னால் திணிக்க

முடியாது. உன்னால் முடியாது! முடியாது! முற்றிலுமாக முடியாது!

- உனக்கு என்மீது எந்த அதிகாரமும் இல்லை என்று ஆணித்தரமாகக் கட்டளையிடுகிறேன்.
- எந்தவொரு வியாதியோ, வாதையோ என் சரீரமாகிய கூடாரத்தின் அருகில் வரமுடியாது. சாத்தானே, நீ முற்றிலும் தவறான முகவரிக்கு வந்துவிட்டாய்!
- என் சரீரத்தில் உனக்கு ஒரு அங்குல இடத்தைக் கூட நான் விட்டுத்தர மாட்டேன்; உனக்கு இங்கே எந்த இடமுமே இல்லை!
- உன்னால் எந்தப் பலவீனத்தையும் எனக்குள் கொண்டுவர முடியாது. நான் அதைச் சற்றும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்; வியாதி எனக்குரியதல்ல.
- நான் முற்றிலுமாக என் தேவனுக்குச் சொந்தமான பிள்ளை. என்னிடத்திலோ என் சரீரத்திலோ உனக்கு எவ்விதப் பங்கும் இல்லை.
- வியாதியே, நான் உனக்கு எந்தச் சந்தர்ப்பமும், அடைக்கலமும் கொடுக்காததபடியினால், என்னை விட்டு

வெளியேறுவதைத் தவிர உனக்கு வேறு வழியே இல்லை.

- இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகி றேன்: இப்போதே என்னைவிட்டு வெளியேறு! ஆமென்.

---

*யாக்கோபு 4:7*
*"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *என் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் நான் என் தேவனிடத்தில் முழுமையாக அர்ப்பணிக்கிறேன்.*
- *அவருடைய பரிபூரண சித்தத்திற்கும், தேவ வார்த்தையின் மாபெரும் அதிகாரத் திற்கும் என்னை நான் முற்றுமுழுதாகக் கீழ்ப்படுத்துகிறேன்.*
- *தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பதால், பிசாசே, நான் உன்னை இயேசுவின் நாமத்தில் அதிகாரத்தோடு எதிர்க்கிறேன்!*
- *நீ கொண்டுவரும் எவ்விதமான வியாதி யையும் நோயையும் நான் வன்மையாக எதிர்க்கிறேன். என் சரீரத்தின்மேல் எந்த*

*வியாதியையும் திணிக்க உன்னால் முடியாது!*

- *வெளியேறு! இப்போதே என்னைவிட்டு வெளியே போ!*
- *உன் அசுத்தக் கைகளை என் சரீரத்திலிருந்து எடுத்துக்கொண்டு, இப் போதே நீ வெளியேறியாக வேண்டும்!*
- *நான் உன்னை எதிர்த்து நிற்பதினால், தேவனுடைய வார்த்தையின்படி நீ என்னைவிட்டுத் தலைதெறிக்க ஓடிப்போ வதைத் தவிர உனக்கு வேறு வழியே இல்லை! ஆமென்.*

---

*1 பேதுரு 5:8-9*
*"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலேயே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- நான் எப்பொழுதும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசை ஆவிக்குரிய அதிகாரத்தோடு எதிர்த்து நிற்கிறேன்!

- என்னையோ, என் சரீரத்தையோ, என் ஆரோக்கியத்தையோ அவனால் ஒருபோதும் விழுங்க முடியாது.

- வியாதி என்பது முற்றிலும் பிசாசின் கொடிய செயல் என்பதை நான் திட்டவட்டமாக அறிவேன்.

- அந்தப் பிசாசின் கிரியைகளை முற்றிலுமாக அழிக்கவே தேவனுடைய குமாரனாகிய இயேசு உலகத்தில் வெளிப்பட்டார்!

- ஆகையால், என்னைப் பொறுத்தவரை வியாதி என்பது வேரோடு அழிக்கப்பட்டு விட்டது; அது முற்றிலுமாக உடைக்கப் பட்டுவிட்டது!

- என் சரீரத்தில் வியாதியின் வல்லமை ஒழிக்கப்பட்டு, செயலிழந்து, சுக்குநூறாகத் தகர்க்கப்பட்டுவிட்டது.

- இயேசு தாமே எனக்காக வியாதிக்கும் நோய்க்கும் ஒரு நிரந்தர முடிவுகட்டி விட்டார்!

- *என் வாழ்வில் பிசாசின் சகல செயல்பாடுகளும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. இயேசுவுக்குள் நான் மாபெரும் ஜெயத்தைப் பெற்றிருக்கிறேன்! ஆமென்.*

# 5. நிறைவுப் பிரகடனம் – இயேசுவின் நாமத்தின் வல்லமை

*மாற்கு 16:17-18*
*"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமடைவார்கள் என்றார்."*

***விசுவாச அறிக்கையிடல்:***

- *இயேசுவின் வல்லமையுள்ள நாமம், உலகத்திலுள்ள எந்த வியாதியையும் விட மகா பெரியது!*
- *இயேசு தாமே சகல வியாதிகளையும், நோய்களையும் சிலுவையில் முற்றிலுமாக வென்றுவிட்டார்.*

- *பாவத்தையும், வியாதியையும், சாத்தானையும் முழுமையாக ஜெயித்த அதே இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில், வியாதி என் சரீரத்தை விட்டு இப்போதே வெளியேறும்படி நான் கட்டளையிடுகிறேன்!*
- *சாத்தானே, என் சரீரத்தின் மேலிருக்கிற உன் அசுத்தமான கைகளை உடனே எடு!*
- *கர்த்தராகிய இயேசு எனக்குக் கொடுத்த மாபெரும் அதிகாரத்தினாலே, நான் உன்னை என் சரீரத்தை விட்டுத் துரத்துகிறேன்.*
- *உன்னால் இனி எனக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது! எந்த வியாதியையும் என்மேல் திணிக்க முடியாது!*
- *இயேசுவின் நாமத்தில், நான் சகல வியாதிகளிலிருந்தும் முற்றுமுழுதாக விடுதலையாகிவிட்டேன்! ஆமென்.*

---

*யோவான் 14:12-14*

*"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய*

*கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."*

*அப்போஸ்தலர் **3:16***
*"அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவராலே உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது."*

---

***விசுவாச அறிக்கையிடல்:***

- *இயேசுவின் நாமத்தில் மாபெரும் வல்லமை உண்டு! சர்வவல்லமையுள்ள உயிர்த்தெழுந்த சுகமளிக்கும் கர்த்தர் அவரே.*
- *என் சரீரத்தை விட்டு சகல நோய்களும் இப்போதே வெளியேறும்படி, வல்லமை யுள்ள இயேசுவின் நாமத்தில் நான் அதிகாரத்தோடு கட்டளையிடுகிறேன்!*
- *அப்போஸ்தலர் **3:16**-ல் சொல்லப்பட்டிரு க்கிறபடி, அவருடைய நாமத்தைப் பற்றும்*

விசுவாசமே என் சரீரத்திற்குப் பூரண சுகத்தையும் பெலனையும் தந்திருக்கிறது.

- இயேசுவின் நாமத்தினாலே நான் பரிபூரணமாகக் குணமடைந்திருக்கிறேன்! அந்த நாமமும், அந்த நாமத்தின்மேல் நான் வைத்திருக்கும் அசையாத விசுவாசமுமே எனக்குப் பரிபூரண ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது.
- என் இயேசுவின் நாமம் உலகத்திலுள்ள எந்த வியாதியையும் விட மகா பெரியது! அவர் எப்பேர்ப்பட்டவரோ, அவர் என்னவெல்லாம் செய்ய வல்லவரோ, அந்த மாபெரும் வல்லமை முழுவதும் 'இயேசு' என்ற அந்த ஒற்றை நாமத்தில் அடங்கியிருக்கிறது.
- அவர் வியாதிகளை விடப் பெரியவர்; அவர் சிலுவையில் சகல வியாதிகளையும் வென்றுவிட்டார்!
- ஆகையால், என் சரீரத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் முன்பாக 'இயேசு' என்ற அந்த ஜீவனுள்ள நாமத்தை நான் இப்போது உச்சரிக்கிறேன்.
- எனக்குள் இருக்கும் எல்லா நோய்களும், வியாதிக் கிருமிகளும் இயேசுவின்

வல்லமையுள்ள நாமத்தில் இப்போதே செத்து மடிகின்றன!

- இயேசுவின் உன்னத நாமத்தில் என் சரீரம் முழுமையாக ஆரோக்கியமடைகிறது! ஆமென்.

அல்லேலூயா! பிதாவே, உம்மைத் துதிக்கிறேன்! தேவனுடைய வார்த்தை ஒருபோதும் வீணாய்ப் போகாது. என்னைச் சுகமாக்கிய உம்முடைய வார்த்தைக்காகவும், எனக்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்திற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். என் சரீரம் இப்போது கிறிஸ்து வாழும் ஆரோக்கியமான ஆலயம்! இயேசுவின் உன்னத நாமத்தில் எனக்கு ஜெயங்கொடுத்த தேவனுக்கே மகிமை! ஆமென்.

# கிறிஸ்துவின் வல்லமையும் மாறாத தன்மையும்

*பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெபஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார் (மத்தேயு 4:23).*

*இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெபஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார் (மத்தேயு 9:35)*

*இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் (மாற்கு 9:23).*

*பிசாசுகளும்: நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று கூக்குரலிட்டு, அநேகரை விட்டுப் புறப்பட்டது. அவர்கள் அவரை கிறிஸ்து என்று அறிந்திருந்தபடியினால், அவர் அவர்களைப் பேசவொட்டாமல் அதட்டினார் (லூக்கா* ***4:41).***

*அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்களெல்லாரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள் (லூக்கா* ***6:19).***

*ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்; பசியுள்ளவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார்; கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார் (சங்கீதம்* ***146:7).***

*கர்த்தர் குருடரின் கண்களைத் திறக்கிறார்; கர்த்தர் மடங்கடிக்கப்பட்டவர்களைத் தூக்கிவிடுகிறார்; கர்த்தர் நீதிமான்களைச் சிநேகிக்கிறார் (சங்கீதம்* ***146:8).***

*இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் மாறாதவராயிருக்கிறார் (எபிரெயர்* ***13:8).***

# சுகமளிக்கும் தேவ வாக்குத்தத்தங்கள்

*கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; துதிக்கப்படத்தக்கவர் நீரே (எரேமியா 17:14).*

*நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 30:17).*

*இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்ப டுத்துவேன் (எரேமியா 33:6).*

*அவன் வழிகளை நான் பார்த்து, அவனைக் குணமாக்குவேன்; அவனை நடத்தி, அவனுக்கும் அவனோடே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன் (ஏசாயா 57:18).*

*அப்பொழுது விடியற்கால வெளிச்சத்தைப் போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகம்*

*சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும் (ஏசாயா 58:8).*

*நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வ மாய் நேசிப்பேன்; என் கோபம் அவனை விட்டு நீங்கிற்று (ஓசியா 14:4).*

*உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன் (2 இராஜாக்கள் 20:5).*

*படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியில் அவனுடைய படுக்கையையெ ல்லாம் மாற்றிப்போடுவீர் (சங்கீதம் 41:3).*

*உன் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களி னாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலிபவயதுபோலாகும் (சங்கீதம் 103:4-5).*

*நான் சாவாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் (சங்கீதம் 118:17).*

*இருதயம் நொறுங்குண்டவர் களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங் களைக் கட்டுகிறார் (சங்கீதம் 147:3).*

*கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் நினைக்கிறது என்ன? அவர் முழுமுடிவை உண்டாக்குவார்; இக்கட்டு மறுபடியும் உண்டாகாது (நாகூம் 1:9).*

*அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரி லிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11).*

# பெலன் மற்றும் நம்பிக்கையின் வாக்குத்தத்தங்கள்

*சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார் (ஏசாயா 40:29).*

*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசாயா 40:31).*

*நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசாயா 41:10).*

*கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம்*

*அவரை நம்பியிருந்தது; நான் சகாயம்பெற்றேன், ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன் (சங்கீதம் 28:7).*

*நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லா வற்றிலுமிருந்து அவனை விடுவிப்பார் (சங்கீதம் 34:19).*

*உன் தேவன் உனக்குப் பலத்தைக்கட்டளை யிட்டார்; தேவனே, நீர் எங்களுக்காகச் செய்ததை உறுதிப்படுத்தும் (சங்கீதம் 68:28).*

*கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக் கிறார் (சங்கீதம் 121:5).*

*கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார் (சங்கீதம் 121:7).*

*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவி னாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பலனுண்டு (பிலிப்பியர் 4:13).*

*தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோத்தேயு 1:7).*

## குணமாக்கும் வேத மாத்திரை

*சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (1 தெசலோனிக்கேயர் 5:23).*

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).*

*ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:36).*

# விசுவாசம் மற்றும் ஜெபத்திற்கான ஆலோசனைகள்

*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் (பிலிப்பியர் 4:6).*

*ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபிரெயர் 4:16).*

*ஆனாலும் அவன் எவ்வளவாயினும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் (யாக்கோபு 1:6).*

*உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம்பாடக்கடவன் (யாக்கோபு **5:13**).*

*கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; கர்த்தருக்கே காத்திரு (சங்கீதம் **27:14**).*

*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (சங்கீதம் **31:24**).*

*கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானைத் தள்ளாடவொட்டார் (சங்கீதம் **55:22**).*

*உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு. அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாயிருக்கும் (நீதிமொழிகள் **3:7-8**).*

*அவர் எனக்குப் போதித்துச் சொன்னது: என் வார்த்தைகளை உன் இருதயம் காக்கக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய் (நீதிமொழிகள் **4:4**).*

*என் கட்டளைகளைக் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்; என் போதகத்தை உன் கண்மணியைப்போலக் காத்துக்கொள் (நீதிமொழிகள் 7:2).*

*உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்... (ஏசாயா 55:3)*

*துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்திற்குத் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் இரக்கமாயிருப்பார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக் கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிறார் (ஏசாயா 55:7).*

*கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால்: என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் (ஆமோஸ் 5:4).*

*நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருப்பார் (ஆமோஸ் 5:14).*

*ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்வீர்களாக; அவைகளைச் செய்கிற எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர் (லேவியராகமம் 18:5).*

*நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்திற்குத் திரும்பக்கடவோம் (புலம்பல் 3:40).*

# எங்களின் வெளியீடுகள்

*Note: All our releases are **not copyrighted** but given **free of cost** & made **Public Domain**, as per Matthew 10:8. So, you are free to download, print, publish without any permissions from us.*

1. *Bible Concordances (Online, Apps & PDFs)*
2. *Bible Devotions (Online, Apps & PDFs)*
3. *Bible Dictionaries (Online, Apps & PDFs)*
4. *Bible Wallpapers (in many languages)*
5. *Promise Cards (in many languages)*
6. *Good News Collections (Online, Apps & PDFs)*
7. *Bible App/Software Modules*
8. *Bible Stickers & Boards for Gospel*
9. *Gospel Tracks (in many languages)*
10. *Old Bibles (PDFs)*
11. *Mobile Ringtones (Bible Verses / Songs, many languages)*

<u>நூல்கள் *(Printed / E-Books)*</u>

1. ஒரு வருட வேத வாசிப்பு திட்டம்
2. *One Year Bible Reading Plan*
3. சங்கீதமும் நீதிமொழிகளும்
4. சங்கீத புத்தகத்திலுள்ள ஜெபங்கள்
5. தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் *1*
6. தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் *2*
7. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 1*
8. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 2*
9. *Bible Memory Verses Volume 1*
10. *Bible Memory Verses Volume 2*

11. *Bible Coloring Books 01 Creation [Tamil, English]*
12. *Bible Coloring Books 02 Adam and Eve [Tamil, English]*
13. *Bible Coloring Books 03 Cain and Abel [Tamil, English]*
14. *Bible Coloring Books 04 Noah [Tamil, English]*
15. *ஞாயிறு பள்ளி பாடங்கள் - தொடக்கநிலை - பாகம் 1*
16. *Tanglish - Gnayiru Palli Paadangal - Thodakkanilai - Baagam 1*
17. *Bible Coloring Book for Sunday School Syllabus Beginners - Volume 1*
18. *வேதாகம தியானங்கள் பாகம் 1 – [40 லெந்து நாட்கள் [ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
19. *வேதாகம தியானங்கள் பாகம் 2 – [40 லெந்து நாட்கள் [ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
20. *வேதாகம தியானங்கள் பாகம் 3 - [25 கிறிஸ்மஸ் தியானங்கள். ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
21. *வேதாகம தியானங்கள் பாகம் 4 [365 நாட்கள். ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
22. *வேதாகம தியானங்கள் பாகம் 5 [ஆசிரியர்: சார்லஸ் ஸ்பர்ஜன்]*
23. *தம்பிரான் வணக்கம் 1578 [ஆசிரியர்: பழங்காசு சீனிவாசன், ஏசுதாஸ் சாலொமோன்]*
24. *தமிழ் பைபிள் 1714 பாகம் 1 (மத்தேயு முதல் அப்போஸ்தலருடைய நடபடிகள் வரை)*
25. *தமிழ் பைபிள் 1714 பாகம் 2 (ரோமர் முதல் வெளிப்படுத்தல் வரை)*
26. *ஒருவருட வேதாகமம் (தமிழ், English, Telugu, Kannada, Malayalam, Hindi)*
27. *ஒருவருட வேதாகமம் - சம்பவங்கள் நடந்த கால வரிசைப்படி (தமிழ், English, Telugu, Kannada, Malayalam, Hindi)*
28. *வேதாகம புத்தக அறிமுகம்*

## எங்களின் வெளியீடுகள்

*29. தமிழ் வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை*
*30. அபிஷேகம் [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]*
*31. என் வாழ்வில் தேவனுடைய கிருபை [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]*
*32. தமிழ் இணைநிலை வேதாகமங்கள்*
*33. English Parallel Bibles [Hebrew, Greek, Latin, English all in one)*
*34. கர்த்தருக்குச் சித்தம் [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]*
*35. சீகன்பால்குவின் ஓலைச்சுவடி பிரசங்கங்கள்*
*36. 70 விதமான பாக்கியவான்கள் [சீகன்பால்கு]*
*37. தமிழ் வேதாகம பழைய மொழிபெயர்ப்புகள்*
*38. சிறுவர்களுக்கான மாதிரி ஜெபங்கள் பாகம் 1 & 2*
*39. Model Prayers for Kids Volume 1 & 2*
*40. விசுவாச ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*41. அன்பின் ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*42. தேவசித்த ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*43. நீங்கள் இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டியது மிக மிக அவசியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*44. கிறிஸ்தவ கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்?*
*45. இயேசு கிறிஸ்து யார்? அவர் எப்படிப்பட்டவர்?*
*46. ஸ்ட்ராங்க்ஸ் எபிரேய அகராதி*
*47. ஸ்ட்ராங்க்ஸ் கிரேக்க அகராதி*
*48. Your Lifelong Bible Guide for Every Stage of Life*
*49. குணமாக்கு வேத மாத்திரை (வசனங்கள்)*
*50. Healing Bible Tablet (Scriptures)*
*51. பல்வேறுக் கைப்பிரதிகள் (English, Tamil, Kannada)*

தேவனால் முடியாதது ஒன்றும் இல்லை!

அவருடைய வார்த்தைகளால் செய்ய
முடியாதது என்று ஒன்றுமே இல்லை!!

அவருடைய வார்த்தை ஒன்றே போதும்!
அத்தனை வியாதிகளும் பறந்தே போகும்!!


**பதிவிறக்கம் / Download:**

www.WordOfGod.in  www.Archive.Org

**WhatsApp: +91 7676505599**

**Email:** wordofgod@wordofgod.in


**BIBLE MINUTES**

